# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | S.T.C No. 789/2020 |
| Deposition of witness | : | PW- 1 |
| Name | : | தினேஷ் |
| Father's /Husband Name | : | ராஜாராமன் |
| Village | : | அகராத்தூர் |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 31 |
| Occupation | : | பட்டறை வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 30th day October 2024. Complainant present. Accused present. Both counsel present.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:-**

இவ்வழக்கினை தாக்கல்செய்ய நான் விபரங்கள் கூறினேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் கடன் தொகை ரூபாய் 8,00,000/- ஆகும். எதிரி எனக்கு எப்படி தெரியும் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் மரப்பட்டறையை திருப்புறம்பியத்தில் வைத்துள்ளேன். அதன் உரிமம் என்னுடைய அப்பா பெயரில் உள்ளது. எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் அவர் பில்டிங் வேலையை கான்டராக்ட் எடுத்து செய்து வருகிறார். தெரியாத நபருக்கு ரூபாய் 8,00,000/- கடன் பொதுவாக தரமாட்டார் என்றால் சரிதான், எதிரி எனக்கு தெரிந்த நபர் ஆவார். எதிரி பில்டிங் வேலையை கான்டராக்ட் எடுத்து செய்வதாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி அவ்வாறு வேலையை செய்யவில்லை என்றாலும், அவர் தினக்கூலியாக கொத்தனார் வேலை செய்கிறார் என்றால் சரியல்ல. எதிரி என்ன படித்திருக்கிறார் என்றால் தெரியாது. எதிரி மேஸ்திரி கொத்தனார் வேலை செய்து வருகிறார். பில்டிங் வேலை செய்வதால் அவ்வாறு அழைப்போம். எதிரி செய்யக்கூடிய வேலைகளுக்கு என்னிடம் மரத்தை அளவு கூறி வாங்கி செல்வார். எத்தனை வருடமாக அவ்வாறு செய்து வருகிறார் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 4,5 வருடங்களுக்கு முன்பாக என்னிடம் மரத்தை அளவு கூறி வாங்கி செல்வார். அவ்வாறு மரங்கள் வாங்கும்போது நான் கடன் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். எதிரி வாங்கிய கடனை அவர் அடுத்த வேலையை எடுக்கும்போது என்னிடம் திரும்ப கொடுப்பார். ஒரு பில்டிங் வேலை முடிவதற்கு 4,5 மாதங்கள் ஆகும் என்றால் சரிதான். அவ்வாறு கடன் தொகையான என்னிடம் திரும்ப செலுத்த 4,5 மாதங்கள் ஆகும் என்றால் சரிதான். முழு தொகையையும் கடனாக பெறமாட்டார். பாதி செலுத்திவிட்டு பாதியை கடனாக

பெற்று செல்வார். மரப்பட்டறையில் நான் அவ்வாறு கடன் விபரங்களை எழுதி வைப்பேனா என்றால் இல்லை. ஒரு நாளைக்கு எவ்வளவு நபர் மர அறுக்க வருவார்கள் என்றால் அது வேலையை பொருத்தது. மேற்படி வியாபாரங்கள் அனைத்தையும் நோட்டில் எழுதி வைப்பேனா என்றால் இல்லை. அவ்வப்போது ரசீது எழுதி கொடுத்திவிடுவேன். ஆண்டு வரவு செலவு பார்ப்பேனா என்றால் இல்லை. வனத்துறையினர் அவ்வப்போது ஆய்வு செய்வார்கள் என்றால் அவர்கள் வனத்துறை மரங்கள் உள்ளதா என்று மட்டும் ஆய்வு செய்வார்கள். எனது பட்டறையில் விற்பனை வரி கட்டும் பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. வருடத்திற்கு ஒரு முறை செலுத்தி வருகிறேன். விற்பனை வரி செலுத்தும்போது வரவு செலவு பார்த்துதான் செலுத்த வேண்டும் என்றால் சரிதான். என்னுடைய மரப்பட்டறையில் வரவு செலவு பராமரிப்பது வழக்கம் என்றாலும், அதனை மறைக்கும் பொருட்டு நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுத்தாக சொல்லும் காலத்தில் எதிரி எந்த இடத்தில் பில்டிங் வேலை செய்தார் என்று குறிப்பிட்டு கூற முடியுமா என்றால் இயலாது. பொதுவாக கடன் ஒருவருக்கு கொடுக்கும்போது கடன் பெறுபவர்களின் திரும்ப செலுத்தும் தகுதியை தெரிந்துகொண்டு தான் கடன் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். ரூபாய் 8,00,000/- என்பது சிறிய தொகை அல்ல என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் எத்தனை வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் 2 வழக்குகள் நடத்தி வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் காசோலையில் உள்ள விபரங்களை யார் எழுதினார்கள் என்றால் தெரியாது, எழுதிய காசோலையில் எதிரி என் முன்பாக கையொப்பம் செய்தார். காசோலையில் உள்ள பெயர் மற்றும் தொகையை எதிரி எழுதவில்லை என்றால் தெரியாது, இரண்டிற்கும் வித்தியாசம் உள்ளது. காசோலையில் உள்ள பெயர் மற்றும் தொகைக்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வழக்கு தாக்கல் செய்வற்கு முன்பாக அனுப்பியுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள பெறுநர் கையொப்பம் எதிரியுடையது அல்ல என்றால் சரிதான். அதனை யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் அவரது மனைவியாக இருக்கலாம், எனக்கு தெரியாது. எதிரியின் மனைவி பெயர் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பினை முறையாக எதிரிக்கு சார்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் மரம் வாங்கும்போது அதிகபட்சமாக எவ்வளவு கடன் பெறுவார் என்றால் ரூபாய் 1 லட்சம் வரை கடன் பெறுவார். எதிரி அவ்வாறு கடன் பெறும் தொகையை வரவு செலவு நோட்டில் குறித்து வைத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு கடன் கொடுப்பதற்கு உத்தரவாதமாக என்ன எழுதி வாங்குவேன் என்றால் எதுவுமே வாங்கியது இல்லை. 4,5 வருடத்தில் எதிரி என்னிடம் மரத்திற்காக வாங்கிய கடனை முழுமையாக செலுத்திவிட்டார் என்றால் இல்லை, நிலுவை தொகை உள்ளது. அது எவ்வளவு என்றால் வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பாக ரூபாய் 25,000/- ஆகும். வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பாக ரூபாய் 25,000/-த்தினை

திரும்ப பெறுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நான் நேரடியக கேட்டுள்ளேன். அதனை எப்போது கேட்டேன் என்று நினைவில்லை. அந்த தொகைக்கு காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். ரூபாய் 25,000/—த்திற்கு எவ்வித குறிப்பும் இல்லை. நான் சொல்லும் நாள் நேரத்தில் எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் மரப்பட்டறையை யார் பார்த்தார்கள் என்றால் நான் பார்த்தேன். மேற்படி மரப்பட்டறையில் ஆண்டு வருமானம் எவ்வளவு, வரி எவ்வளவு என்று ஆடிட்டரை கேட்க வேண்டும். எனது ஆடிட்டரின் பெயர் சீனிவாசன் ஆகும். மரப்பட்டறையின் கையெழுத்து அதிகாரம் யாருக்கு உள்ளது என்றால் தற்போதைக்கு என்னிடம் உள்ளது. வழக்கு தாக்கல் செய்தபோது எனது அப்பாவிடம் இருந்தது. எதிரிக்கு மரங்களை எனது அப்பாதான் கடன் கொடுத்து வந்தார் என்றால், எனக்கும் தெரியும், நானும் கடன் கொடுத்துள்ளேன். மரப்பட்டறையில் மரங்கள் வாங்கும் வகையில் எதிரி எனக்கு அப்பாவுக்கு தான் பழக்கம் என்றாலும், எதிரியை எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. எதிரி எனது அப்பாவிடம் பூர்த்தி செய்யாமல் கொடுத்த காசோலையை நான் தவறாக பூர்த்தி செய்து இவ்வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ரூபாய் 8,00,000/— கடன் கொடுக்க தகுதி இல்லை என்றாலும், எவ்வித சட்டப்படியான கடனையும் நான் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றாலும், அதனால் எதிரி கடனை திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்களை பொய்யாக தயார் செய்து இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./- M. Elavarasi,
Judicial Magistrate No.I, Kumbakonam.